சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.76/2022

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ம் நாள் பி.வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | வயது | 72 |
| த/பெ | பழனிசாமி | வட்டம் | கோபிசெட்டிப்பாளையம் |
| விலாசம் | நாகர்பாளையம், 3 ஜவகர் வீதி | மாவட்டம் | ஈரோடு |
| | | தொழில் | விவசாயம் |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை** :

நான் 10 ம் வகுப்பு படித்து உள்ளேன். 1 ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அத்தையின் பேரன் ஆவார். என்னுடைய நிரூபண வாக்கு மூலம் 1 ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி அவர் தயார் செய்தார். சாட்சியம் அளிக்க எனக்கு எந்த அழைப்பாணையும் வரவில்லை என்றால் சரி தான். பி.வா.சா.ஆ.1 ல் பெண் வாரிசுகளுக்கு தலா ரூ.2,25,000/- கொடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ள நிபந்தனை பற்றி தெரியுமா என்றால் தெரியும். அந்த தொகையை நான் தான் முன் நின்று வாங்கி தர வேண்டும் என பி.வா.சா.ஆ.1 உயிலில் கூறப்பட்டு உள்ளது என்றால் சரி தான். அந்த பணத்தை தருவதற்கு 1 ம் பிரதிவாதியோ அல்லது அதனை வாங்கி தருவதற்கு நானோ எந்த தேதியில் முயற்சி செய்தோம் என என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் தேதி

குறிப்பிடவில்லை. ஆனால் பல முறை முயற்சித்தும் வாங்க மறுத்து விட்டதாக குறிப்பிட்டு உள்ளேன். நான் அவ்வாறு எந்த முயற்சியும் செய்யவில்லை என்றும் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல. நான் சொல்வது போல் பெத்த மணி நல்ல சுய நினைவுடன் உயில் ஆவணம் எழுதி கொடுக்க வில்லை என்றும் அவரது உடல் நிலையை பயன்படுத்தி உயில் ஆவணம் எழுதி வாங்கி கொண்டார்கள் என்றால் சரி அல்ல. நான் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா.கெங்காராஜ்,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.